சுருக்கம்

பள்ளிக் கல்வி – சென்னை உயர்நீதிமன்ற-மேல்முறையீட்டு வழக்கு எண்கள்.882/2017 மற்றும் இதர வழக்குகளில் பெறப்பட்ட 06.04.2018ம் நாளிட்ட தீர்ப்பாணையினை செயல்படுத்திட வேண்டி 01.04.2003–க்கு முன்னர் முறையான ஊதிய விகிதத்தில் கொண்டுவரப்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளி பகுதிநேர தொழிற்கல்வி ஆசிரியர்களின் பகுதிநேர பணிக்காலத்தில் 50 விழுக்காட்டை ஒய்வூதியத்திற்கு கணக்கில் எடுத்துக்கொள்ளுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி (பக7–1)த் துறை

அரசாணை (நிலை) எண். 194

நாள்.12.09.2018
திருவள்ளுவர் ஆண்டு, 2049
ஆவணி– 27
படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண்.712, கல்வி, நாள்28.05.1990.
2. அரசாணை (நிலை) எண்.967, கல்வி, நாள்16.10.1992.
3. அரசாணை (நிலை) எண்.834, கல்வி அறிவியல் (ம) தொழில் நுட்பவியல், நாள்23.09.1994.
4. அரசாணை (நிலை) எண்.358, பள்ளிக் கல்வித் துறை, நாள்18.08.1997.
5. அரசாணை (நிலை) எண்.74, பள்ளிக் கல்வித் துறை, நாள்10.06.2002.
6. சென்னை உயர்நீதிமன்ற மேல்முறையீட்டு வழக்கு எண்.882, 808/2017 மற்றும் பல வழக்குகளின் தீர்ப்பாணை நாள் 06.04.2018.
7. பள்ளிக் கல்வி இயக்குநரின், கடித ந.க.எண். 053837/வி1/இ1/2016, நாள்.03.07.2018.

********

ஆணை:

மேலே ஒன்று முதல் ஐந்து வரை படிக்கப்பட்ட அரசாணைகளின்படி 01.04.2003–க்கு முன்னர் முறையான ஊதிய விகிதத்தில் கொண்டுவரப்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரிந்த பகுதிநேர தொழிற்கல்வி ஆசிரியர்கள் தங்களது பகுதிநேர பணிக்காலத்தில் 50 விழுக்காட்டை ஒய்வூதிய கணக்கில் எடுத்துக் கொண்டு ஒய்வூதியப்பலன்கள் அனுமதிக்க வேண்டி சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் பல்வேறு வழக்குகள் தொடர்ந்தனர். இவ்வழக்குகளில் சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை மனு எண்கள்.5232/2014, 25236/2014, 3264/2014, 5830/2014, 35013/2014, 5214/2014 மற்றும் 23545/2014–இல் பெறப்பட்ட தீர்ப்பாணைகள் மீது அரசால் தாக்கல் செய்யப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற மேல்முறையீட்டு வழக்கு W.A. No.882, 808/2017, 1224, 1395, 1471, 1283 மற்றும் 1323/2016 மற்றும் C.M.P.Nos.12269, 11319/17,

த.பி.பா

15744, 15745, 17938, 17939, 18318, 18319, 17906, 17919 மற்றும் 17159/2016-இல் 06.04.2018-ஆம் நாளன்று பின்வருமாறு தீர்ப்பாணை பெறப்பட்டுள்ளது:-

**COMMON JUDGEMENT**

"15. In terms of the above discussions, we dispose of the writ appeals as under:

(i) 50% of the services rendered by the respondents herein, as Part Time Vocational Instructor (either as Single Part Time or Double Part Time Vocational Instructor), shall be counted for the purpose of computing pension and other retiral benefits.

(ii) The above said benefit shall be extended only to the respondents in these writ appeals and for the persons similarly situated like that of the respondents herein, whose cases are pending before this Court. Thus it is made clear that the above said benefit shall not be extended to any other further cases that may be filed on this account, on the ground of delay and laches, since all along they have not come up before this Court and remained as fence-sitters. It is also needless to point out that allowing such cases would amount to opening the pandora's box, touching upon the financial implications of the State.

16. The writ appeals are disposed of accordingly. No costs. Consequently, the connected miscellaneous petitions are closed."

2. மேற்காண் நீதிமன்ற தீர்ப்பாணையினை செயல்படுத்துவது தொடர்பாக பள்ளிக் கல்வி இயக்குநர் தனது கடிதத்தில், தமிழகத்தில் 1978-ஆம் ஆண்டு முதல் மேல்நிலைக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டு, அதில் பொதுக்கல்வி மற்றும் தொழிற்கல்வி என இரு பாடப்பிரிவுகள் பிரிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது எனவும், அதில் தொழிற்கல்வி ஆசிரியர்கள் ஒரு பகுதி நேரம் மற்றும் இரு பகுதி நேர ஆசிரியர்களாகப் பணிபுரிந்து பின்னர் மேலே ஒன்று முதல் ஐந்து வரை படிக்கப்பட்ட அரசாணைகளின் மூலம் முறையான ஊதிய விகிதத்திற்கு கொண்டுவரப்பட்டனர் எனவும், அவர்களில் பெரும்பாலோர் தற்போது பகுதி நேர பணிக்காலத்தில் 50 விழுக்காட்டை ஓய்வூதிய கணக்கில் எடுத்துக்கொண்டு, ஓய்வூதியப் பலன்கள் வழங்கக் கோரி வழக்குகள் தொடர்ந்து தங்களுக்கு சாதகமாக தீர்ப்பாணை பெற்றுள்ளனர் எனவும், பல்வேறு தொழிற்கல்வி ஆசிரியர் சங்கங்கள் இதனை தங்களது முதன்மைக் கோரிக்கையாகவும் வைத்து தீர்வு வேண்டியுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார். மேலும், இந்நேர்வு தொடர்பாக இதே போல் பகுதி நேர தொகுப்பூதியம் பெற்று பணிபுரிந்த தொழிற்கல்வி ஆசிரியர்கள் திரு.என்.இராஜேந்திரன், திரு.கே.ஆர்.பரசுராமன், திரு.அங்கப்பன் மற்றும் திரு.பி.ராகவேந்திரன் ஆகியோர் தங்களது பகுதி நேர பணிக்காலத்தில் 50 விழுக்காடு ஓய்வூதியத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்து அவ்வழக்குகளில் மனுதாரர்களுக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது. இத்தீர்ப்பினை எதிர்த்து துறை சார்பில் செய்யப்பட்ட மேல்முறையீடு வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், மேலே குறிப்பிடப்பட்ட தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு அவர்களது பகுதிநேர பணிக்காலத்தில் 50 விழுக்காடு ஓய்வூதிய கணக்கில் எடுத்துக்கொள்ள அரசால் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன எனவும், தெரிவித்துள்ளார்.

4. இந்நிலையில் பள்ளிக் கல்வி இயக்குநர் மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பாணையினை செயல்படுத்திட வேண்டி, சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தோராயமாக 615 வழக்குகள் (776 நபர்கள்) தொடர்ந்துள்ள தொழிற்கல்வி ஆசிரியர்களின் பகுதிநேர பணிக்காலத்தில் 50 விழுக்காட்டை

ஓய்வூதியத்திற்கு கணக்கில் எடுத்துக்கொள்ள உரிய ஆணை வழங்குமாறு அரசை கோரியுள்ளார்.

5. மேற்கண்ட சூழ்நிலையில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம்/ சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை தீர்ப்பாணைகளுக்கிணங்கவும், சென்னை உயர்நீதிமன்ற மேல்முறையீட்டு வழக்கு எண்கள். 882, 808/2017, 1224,1395, 1471, 1283 மற்றும் 1323/2016 மற்றும் C.M.P.Nos.12269, 11319/17, 15744,15745, 17938, 17939, 18318, 18319, 17906, 17919 மற்றும் 17159/2016–இல் பெறப்பட்ட 06.04.2018–ஆம் நாளிட்ட தீர்ப்பாணையினை செயல்படுத்த வேண்டியும், பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்கலாம் என முடிவு செய்து, அவ்வாறே 01.04.2003–க்கு முன்னர் முறையான ஊதிய விகிதத்தில் கொண்டுவரப்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரிந்த பகுதிநேர தொழிற்கல்வி ஆசிரியர்களில், சென்னை உயர்நீதிமன்றம்/ சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்குகள் தொடர்ந்து தீர்ப்பாணை பெற்றுள்ள மற்றும் 06.04.2018–ஆம் நாள் வரை வழக்கு தொடுத்து வழக்கு நிலுவையில் உள்ள இவர்களை ஒத்த தொழிற்கல்வி ஆசிரியர்களுக்கு மட்டும் அவர்களின் பகுதிநேர பணிக்காலத்தில் 50 விழுக்காட்டை ஓய்வூதியத்திற்கு கணக்கில் எடுத்துக்கொள்ள அனுமதித்து அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.47659/நிதி (ஓய்வூதியம்)த் துறை, நாள் 12.09.2018–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத் துறை, சென்னை.
இயக்குநர், ஓய்வூதிய இயக்குநரகம், சென்னை.
ஓய்வூதியம் வழங்கல் அலுவலர், சென்னை.
அனைத்து சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகங்கள்,
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்,
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்களின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.
பள்ளிக் கல்வித் துறை, முதன்மைச் செயலாளரின்
முதுநிலைத் முதன்மைச் தனிச் செயலர், சென்னை –9.
பள்ளிக் கல்வி (பக–6)த் துறை, சென்னை–9.
இ.கோ./ உதிரி நகல்

/ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது/

12/9/18
பிரிவு அலுவலர்
12/9/18